தொலைத் தொடர்பு தோழன்

THOLAI THODARBU THOZHAN - Tamil Monthly

மலர் - 1	இதழ் - 8	மார்ச் - 2016	விலை ரூ.5/-
VOLUME - 1	ISSUE - 8	MARCH - 2016	Rs. 5/-

'மே 10' - 7 ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு



பங்கு விற்பனையை தடுத்த சங்கம் BSNLEU
பணிப்பாதுகாப்பை தந்த சங்கம் BSNLEU

பாதுகாப்போம்! பலப்படுத்துவோம் BSNLஐ
வாக்களிப்போம்! வெல்லச் செய்வோம் BSNLEUவை.

பொதுத் துறையாய் BSNL தொடர்ந்து செல்ல,
போராடும் BSNLEU விற்கு வாக்களிப்போம்!

ஊழியர் நலன் காக்கும் சங்கம் BSNLEU !
உதிரத்தில் கலந்த சங்கம் BSNLEU !

நிறைவான ஊதிய மாற்றம்! நிலையான பணிப் பாதுகாப்பு!
பெற்றுத்தந்த சங்கமாம் BSNLEUவிற்கு வாக்களிப்போம்!

ஊதிய மாற்றத்தை உறுதி செய்ய,
உங்கள் வாக்கு செல்போனுக்கே !

நமது சின்னம்
செல்போன்

பெயர் மாற்றம் பெற்றுத் தந்தோம் கேடர்களுக்கு,
பெரும் மாற்றம் பெற்றுத் தருவோம் BSNLக்கு !

வளமான BSNL ..... நிறைவான BSNL ஊழியர்கள் என்பதை உறுதிப்படுத்திட
வாக்களிப்போம் BSNLEU விற்கு!
மீண்டும் முதன்மை சங்கமாய் அமர்த்திடுவோம் BSNLEU வை!

கன்னய்ய குமார்

டில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம். நாட்டின் தலை சிறந்த பல்கலை கழகங்களில் ஒன்று. அங்கு இயங்கும் ஒரு சிறு மாணவர் குழு அப்சல்குரு தூக்கிலிடப்பட்ட தினத்தன்று எதிர்ப்புக் கிளர்ச்சியை நடத்தி இருக்கிறது. அதனைப் பயன்படுத்திக்கொண்டு, ஜேஎன்யு மாணவர் பேரவைத் தலைவர் கன்னய்ய குமார் தேசத்துரோகக் குற்றத்தின்கீழ் கைது செய்யப் பட்டிருக்கிறார்.

முதல் தகவல் அறிக்கையில் மாணவர் பேரவையின் தலைவர் மட்டுமல்ல, பொதுச் செயலாளர் மற்றும் இதர இடதுசாரி மாணவர் அமைப்புகளின் தலைவர்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆர்எஸ்எஸ்சும் அதன் மாணவர் அமைப்பான ஏபிவிபியும் ஜேஎன்யு வளாகத்திற்குள் இயங்கும் இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகளை ஒடுக்கிட இது சரியான வாய்ப்பு என்று நினைத்தன. "தேச விரோத" சக்திகளின் பதுங்குமிடமாக ஜேஎன்யுவை சித்தரிப்பதே ஆர்எஸ்எஸ்-பாஜக பிரச்சாரத்தின் அடிப்படை நோக்கமாகும். உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் கட்டளைக்கிணங்க, காவல் துறையினர் "தேச விரோத" நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக மாணவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள்.

ஒருவர் வன்முறையைத் தூண்டினாலோ அல்லது பொது ஒழுங்கை சீர்குலைத்தாலோ மட்டுமே இக்குற்றப்பிரிவைப் பிரயோகிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் 1962இல் விளக்கமளித்திருக்கிறது. ஜேஎன்யுவில் மதச்சார் பற்ற மற்றும் ஜனநாயக சக்திகளுக்கு எதிராக மிகப் பெரிய அளவில் மோடி அரசாங்கமும் பாஜகவும் "தேச விரோத" நடவடிக்கைகளில் இறங்கி யிருப்பது தெளிவாகத் தெரிகிறது. காவல் துறையினரின் கண் முன்னே பாட்டியாலா நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே நடைபெற்ற தாக்குதல்கள் அதிர்ச்சியளிக்கக்கூடிய நிகழ்வு மேலும், மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் ஆதாரமின்றி மாணவர்கள் மீது அவதூறு சேற்றை அள்ளிப் பூசி இருக்கிறார்.ஜேஎன்யு வளாகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஜேஎன்யு மாணவர் பேரவை ஏற்பாடு செய்யவில்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்று.காவல்துறையின் நடவடிக்கை,. இந்துத்துவா சக்திகளுக்கு எதிராக மதச்சார்பற்ற முறையில் இயங்கும் ஜேஎன்யு மாணவர் சமுதாயத்தை தண்டிக்க வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம் என் பதையே காட்டுகிறது.

ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம் எப்போதுமே ஜனநாயக சூழ்நிலையைப் பாது காத்து வந்திருக்கிறது. இது, பிப்ரவரி 9 அன்று மேற்கொள்ளப்பட்ட காவல்துறையினரின் நடவடிக்கையால் சின்னாபின்னமாக்கப் பட்டிருக்கிறது. . மேலும், பல்கலைக்கழகம் எட்டு மாணவர்கள் மீது விசாரணை முடியும்வரை கல்வி நடவடிக்கைகளைத் தொடர தடை விதித்திருக்கிறது. அரசாங்கத்தின் நிர்ப்பந்தத் தின் காரணமாகவே துணைவேந்தர் நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்பது தெளிவு. கன்னய்ய குமாருக்கு எதிரான பொய் வழக்கு விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். மாணவர்களுக்கு எதிரான தேசத்துரோக வழக்குகள் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். பல்கலைக்கழகத்தில் உள்ள மற்ற அனைத்து மாணவர்களும் ஆசிரியர்களும் ஒன்றுபட்டு நின்று போராடி வருகிறார்கள். இது ஜேஎன்யுவைப் பாதுகாப்பதற் கான போராட்டம் மட்டுமல்ல, படுபிற்போக்குத் தனமான மதவெறி சித்தாந்தத்தையும் பகுத்தறிவற்ற கருத்துக்களையும் திணிக்கும் சக்திகளுக்கு எதிரான ஒரு விரிவான போர்க்களமுமாகும்.

அவர்களின் இந்த சதித்திட்டம் ஒற்றுமை மூலம் முறியடிக்கப்படும். ஆட்சியாளர்கள் தங்களுடைய இந்து ராஷ்ட்ரத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு எதிரான தாக்குதலை ஜேஎன்யுவில் தொடங்கி இருக்கிறார்கள். .எதிராகக் குரல் கொடுப்பவர்களை எல்லாம், "தேச விரோதிகள்"என்று அவதூறு செய் கின்றனர்.. மாணவர்களை, ஆசிரியர்களை அவர்களால் மிரட்டிப் பணியவைக்க முடியவில்லை. நாடு முழுவதும் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் முற்போக்கு சக்திகள் தங்கள் தார்மீக ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள். முன்னதாக தில்லி நாடாளுமன்ற வீதியில், கன்னய்ய குமார் விடுதலையை வலியுறுத்தி பிரம்மாண்டப் பேரணி நடைபெற்றது. பாசிச சக்திகளின் பகல் கனவை முறியடிக்க நாமும் நாடு முழுவதும் கண்டனம் முழங்குவோம்.

தமிழக அரசு ஊழியர்களின் போராட்டம்

கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது அஇஅதிமுக வாக்குறுதியளித்தபடி, ஆட்சி அமைந்ததும் புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து, ஏற்கனவே நடைமுறையிலுள்ள வரையறுக்கப்பட்ட பயனளிப்பு ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்தியிருக்க வேண்டும், ஆனால் அரசு அதனை செயல்படுத்தவில்லை.அதே போல், அனைவருக்கும் ஊதிய உயர்வு, சத்துணவு-அங்கன்வாடி உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் நிரந்தரப்பணி மற்றும் வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குவது, காலிப்பணியிடங்களை நிரப்புவது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 5 ஆண்டுகளாக பலகட்டப் போராட்டங்களை நடத்திய பின்னரும் அரசு நிறைவேற்றவில்லை. எனவே, வேறு வழியின்றி 10-2-2016 முதல் தமிழக அரசு ஊழியர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

போராடும் அரசு ஊழியர்களுக்கு BSNLEU மாநிலமெங்கும் ஆதரவு கரம் நீட்டி15.02.2016 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தியது. சட்டமன்றத்தில் இதைப்பற்றி பேச மறுக்கப்பட்டபோது இடதுசாரி கட்சிகளும் அரசு ஊழியருக்காதரவாக வெளிநடப்பு செய்தன.

10 நாட்கள் நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்கு பின் தமிழக அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் மீது சட்டமன்றத்தில் பல அறிவிப்புகளை வெளியிட்டது. அதன் அடிப்படையில் தமிழக அரசு ஊழியர்களின் எழுச்சியான வேலை நிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டது.

“10 நாட்களாக நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றனர். தினசரி மறியலில் 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர். இந்நிலையில் அரசு, சங்கங்களை அழைத்துப் பேசவில்லை. சட்டப்பேரவையில் தமிழக முதல்வர் 11 கோரிக்கைகள் மீது அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அவை வெறும் அறிவிப்புதான். அரசாணை இல்லை. விரைவில் அரசு புதிய திருத்தப்பட்ட ஆணைகளை வழங்கும் என நம்புகிறோம். தடைபட்ட பணிகளை ஞாயிற்றுக்கிழமை மற்றும் கூடுதல் நேரங்களில் ஊழியர்கள் வேலை செய்து முடிக்க சங்கங்கள் உறுதியேற்றுள்ளன. ஆணைகள் வெளியிடப்படவில்லை எனில் போராட்டம் மேலும் தீவிரமாக நடத்தப்படும் என்பதில் ஐயமில்லை” என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் இரா.தமிழ்செல்வி தெரிவித்துள்ளார்.

கோரிக்கைகளுக்காக ஒன்றுபட்டு போராடிய அரசு ஊழியர்களுக்கு நமது புரட்சிகரமான வாழ்த்துக்களை உரித்தாக்குகிறோம்.

BSNLEU

உள்ளே...

உறுப்பினர் சரிபார்ப்பு	1
கன்னய்ய குமார்	2
தமிழக அரசு ஊழியர்களின்....	3
வேலூர் செயற்குழு...	4
செய்வார்களா?	5
மலை முழுங்கி	7
வெள்ள நிவாரணம்	8
முதலைக் கண்ணீர்	9
செயற்குழு முடிவுகள்	10
ஸ்டார் அப் இந்தியா	11
மத்திய சங்கத்திலிருந்து	12
பணி ஓய்வு	14
மார்ச் 8	16
விரிவடைந்த மத்திய....	17
செயற்குழு நிகழ்வுகள்	19
விரிவடைந்த மத்திய செயற்குழு நிகழ்வுகள்	20

வேலூர் மாநில செயற்குழு முடிவுகள்

தமிழ்மாநில BSNL ஊழியர்சங்கத்தின் மாநில செயற்குழுக் கூட்டம் வேலூரில் உள்ள சரோஜ் இல்லத்தில் 12.02.2016 அன்று மாநில தலைவர் தோழர் S.செல்லப்பா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மாநிலத் துணைத்தலைவர் தோழர் V.வெங்கட்ராமன் அவர்களின் அஞ்சலி உரைக்கு பின் மாநில செயற்குழு தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தியது. பின்னர் வேலூர் மாவட்ட செயலாளர் தோழர் S.தங்கவேல் வரவேற்புரையாற்றினார். மாநிலத் தலைவரும், அகில இந்திய உதவி பொது செயலாளருமான தோழர் S.செல்லப்பா தலைமையுரை ஆற்றினார். கடந்த காலத்தில் நாம் தமிழகத்தில் ஆற்றிய பணிகளை நினைவுபடுத்திய தோழர் S.செல்லப்பா எதிர் வரும் காலத்தில் நாம் 7ஆவது சங்க அங்கீகார தேர்தலில் தமிழகத்தில் முதன்மைச் சங்கமாக வருவதற்கான திட்டங்களை நாம் வகுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

நமது பொதுசெயலாளர் தோழர் அபிமன்யு தனது துவக்க உரையில் செப்டம்பர் 2 வேலை நிறுத்தம் தொடர்பாகவும், மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கைகள் தொடர்பாகவும் விளக்கமாக பேசினார். தற்போது நடைபெற்று வரும் "இன்முகத்துடன் சேவை" 100 நாள் திட்டம் தொடர்பாகவும்,அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், இன்னமும் நாம் செய்ய வேண்டிய பணிகள் தொடர்பாகவும் விளக்கினார். மேலும் உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலுக்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் தொடர்பாகவும், ஊழியர் பிரச்சனைகளை பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்.

அதன் பின்னர் மாநில செயலாளர் விவாதக் குறிப்பை அறிமுகப்படுத்தி பேசினார். அந்தக் குறிப்பின் மீது 30 தோழர்கள் தங்களின் கருத்துக்களை எடுத்துரைத்தனர். விவாதங்களுக்கு பின் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

1.2015 செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தை தமிழகத்தில் வெற்றிகரமாக்கிய அனைத்து தோழர்களுக்கும் மாநில செயற்குழு தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக்கொள்கிறது.

2.தமிழகத்தில் பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணத்திற்காக பணமாகவும் பொருளாகவும் BSNL ல் இருந்து 15 லட்ச ரூபாய்களுக்கு மேல் வழங்கிய BSNL ஊழியர்களுக்கு இந்த மாநில செயற்குழு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

3.சென்னை MMDA காலணியை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்ட அனைத்து ஊழியர்களுக்கும், குறிப்பாக ஒப்பந்த ஊழியர்களுக்கும் இந்த மாநில செயற்குழு தனது பாராட்டுக்களை உரித்தாக்கிக் கொள்கிறது.

4.பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, கடலூர் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாவட்டங்களுக்கு சரியான நேரத்தில் தலையிட்டு Flood Advance பெற்றுத் தந்த மத்திய சங்கத்திற்கு மாநில செயற்குழு பாராட்டுதலை தெரிவித்துக் கொண்டது.

5."இன்முகத்துடன்சேவை"-100 நாள் திட்டத்திற்காக தமிழக FORUM கொடுத்த அறைகூவலான பேரணி நடத்துவது என்ற முடிவை சிறப்பாக அமுலாக்கிய கோவை, சேலம், விருதுநகர், வேலூர் மற்றும் பாண்டிச்சேரி மாவட்ட சங்கங்களுக்கு மாநில செயற்குழு தனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொண்டது.

6."இன்முகத்துடன் சேவை" கருத்தரங்கில் பங்கேற்ற தோழர்களுக்கு பாராட்டினை தெரிவித்துக் கொண்ட மாநில செயற்குழு, இதில் சிறப்புரை ஆற்றிய நமது பொது செயலாளர் உள்ளிட்ட அகில இந்திய தலைவர்களுக்கும், CGM உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டது.

7.100 நாள் திட்டத்தை முழுவீச்சில் தமிழகத்தில் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என அனைத்து ஊழியர்களையும் இந்த மாநில செயற்குழு கேட்டுக் கொண்டது.

8. "அம்பேத்கார்-125" கருத்தரங்கினை சிறப்பாக நடத்திய நீலகிரி, கோவை (திருப்பூர்), மதுரை, பாண்டிச்சேரி, கும்பகோணம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு பாராட்டுதல்களை தெரிவித்துக் கொண்ட மாநில செயற்குழு, இதர பகுதிகளிலும் இந்த கருத்தரங்கினை உடனடியாக நடத்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது.

9. சென்னை கூட்டுறவு சங்கத்தில் சாதாரணக் கடனுக்கு உயர்த்தப்பட்ட வட்டியை குறைக்க வேண்டும், கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான 88 ஏக்கர் நிலத்தை நிலமாகவே ஊழியர்களுக்கு பிரித்துக் கொடுக்க வேண்டும், RGB கூட்டத்தில் எழுப்பப்பட்ட சந்தேகங்களை

தீர்க்கும் வண்ணம் AUDIT SCHEDULE கொடுக்க வேண்டும், THRIFT FUNDக்கான வட்டி விகிதத்தை RGB கூட்டத்தில் எடுத்த முடிவின் அடிப்படையில் உயர்த்த வேண்டும், மற்றும் 2014-15ஆம் ஆண்டுக்கான DIVIDENDஐ உடனடியாக வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளுக்காக நடைபெற்ற போராட்டங்களில் பங்கேற்ற தோழர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு, அடுத்தகட்ட போராட்டத்தை விரைவில் நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது.

10. 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பில் தமிழகத்தில் நமது சங்கம் முதன்மை சங்கமாக வருவதற்காக திட்டமிட்டு செயல்பட வேண்டும். இதற்காக திட்டமிட மார்ச் மாதத்தில் அனைத்து மாவட்ட சங்கங்களும் விரிவடைந்த மாவட்ட செயற்குழுக்களை நடத்தி தேர்தலை சந்திப்பது தொடர்பாக திட்டமிட வேண்டும். நாம் பெரும்பான்மையாக உள்ள மாவட்டங்களிலும் நமது வாக்கு எண்ணிக்கையை அதிகரிக்க சிறப்பு கவனம் எடுக்க வேண்டும். சிறப்பு கிளைப் பொதுக் குழுக்களைக் கூட்டி அதிலும் நாம் விவாதிக்க வேண்டும். நமது உறுப்பினர்களையும் அனைத்து ஊழியர்களையும் வீடுகளுக்கு சென்று சந்தித்திட திட்டமிட வேண்டும். நமது சக்தி குறைவாக உள்ள மாவட்டங்களில் கீழ்கண்ட மாநில சங்கநிர்வாகிகள் பொறுப்பாக தங்கி இருந்து பணியாற்றுவது என்கின்ற ஆலோசனைகளையும் முன்வைக்கின்றோம். நமது சங்கத்தில் பல ஆண்டு காலம் பணியாற்றி சமீபத்தில் பணி ஓய்வு பெற்று இன்றும் நமது இயக்கத்துடன் இணைந்து பணியாற்றி வருகின்ற முக்கிய தோழர்களையும் மாவட்டங்களின் தேவைக்கேற்ப பயன்படுத்தவேண்டும்.

இந்த மூன்றாண்டு காலத்தில் நமது மத்திய சங்கம் செய்திட்ட சாதனைகளோடு தமிழகத்தில், நமது மாவட்டங்களில், கிளைகளில் நாம் நடத்திய இயக்கங்கள், தீர்த்து வைத்த ஊழியர்களின் பிரச்சனைகள் ஆகியவற்றை அனைத்து ஊழியர்களிடமும் கொண்டு செல்வது அவசியம். இதற்காக நமது மத்திய சங்கம் வெளியிட உள்ள சாதனைக் கையேட்டை தமிழில் மாநில சங்கம் மொழி பெயர்த்து கொடுக்கும். அனைத்து ஊழியர்களிடமும் அதனை கொண்டு செல்ல வேண்டும். இது தவிர நமது தமிழகத்தில் மாநில சங்கம் எடுத்த முயற்சிகளையும் தொலை தொடர்பு தோழனில் சிறப்பிதழாக வெளியிடப்படும். இவற்றுடன் பல சுற்றறிக்கைகளையும் மாநில சங்கம் வெளியிடும். இத்துடன் நமது மாவட்டங்களில் தீர்க்கப்பட்ட பிரச்சனைகளையும் உள்ளடக்கி மாவட்ட சங்கங்களும், கிளை சங்கங்களும் பல சுற்றறிக்கைகளை வெளியிட வேண்டும்.

11. சர்வதேச மகளிர் தினமான மார்ச்-8, BSNL CCWF அமைப்பு தினமான மார்ச் 15, BSNL ஊழியர் சங்க அமைப்பு தினமான மார்ச்-22, பகத்சிங் நினைவு தினமான மார்ச்-23, அம்பேத்கர் பிறந்த தினமான ஏப்ரல்-14, மே தினம் ஆகியவற்றை அனைத்து பகுதிகளிலும், சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என மாநில செயற்குழு கேட்டுக் கொண்டது.

12. 7ஆவது உறுப்பினர் சரி பார்ப்பிற்காக ஒவ்வொரு உறுப்பினரிடம் இருந்தும் பிப்ரவரி மாத ஊதியத்தில் தலா ரூ.100/- பெற்று மாநில சங்கத்திற்கு அனுப்பிட வேண்டும்.

13. அகில இந்திய அளவில் வரும் சார்பாளர்களின் வசதிக்கு ஏற்றவகையில் BSNL ஊழியர் சங்கத்தின் 7ஆவது அகில இந்திய மாநாட்டை வெகு சிறப்பாக சென்னையில் நடத்துவது என தமிழ் மாநில செயற்குழு ஏகமனதாக முடிவு செய்துள்ளது.

வெகு சிறப்பாக நடைபெற்ற இந்த மாநில செயற்குழுவில் கலந்து கொண்ட அனைத்து தோழர்களுக்கும், மாநில அமைப்பு செயலாளர் தோழர் A.அண்ணாமலை நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார். ●

வ.எண்	மாவட்டம்	தோழர்கள்
1	திருநெல்வேலி	தோழர் P.இந்திரா ACS
2	காரைக்குடி	தோழர் C.பழனிச்சாமி AGS TNTCWU
3	வேலூர்	தோழர் K.சீனிவாசன் CT, தோழர் C.ஞானசேகரன் Ex.DS
4	திருச்சி	தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் CS
5	தஞ்சாவூர்	தோழர் R.மகேந்திரன் CAT, தோழர் S.நடராஜா ACS AIBDPA
6	கும்பகோணம்	தோழர் M.முருகையா ACS, தோழர் S.நடராஜா ACS AIBDPA
7	கடலூர்	தோழர் S.செல்லப்பா AGS

செய்வார்களா?

M/S ஆதம்ஸ் நிறுவனம் குமரி மாவட்டத்தில் உள்ள மிகச் சிறிய காண்ட்ராக்ட் நிறுவனம். BSNL நிறுவனத்திலும் மற்றும் சில நிறுவனங் களிலும் HOUSE KEEPING AND GENERAL SERVICES போன்ற பணிகளை ஒப்பந்தம் எடுத்து வருகின்றது. அது தனது கீழ் பணிபுரியும் அனைத்து ஒப்பந்த தொழிலாளர் களுக்கும் EPF பங்கை செலுத்தாமல் சுமார் 48,13,354 ரூபாய் பாக்கி வைத்துள்ளதாக REIONAL PROVIDENT FUND COMMISSIONER , நாகர்கோவில் அவர்கள் அந்நிறுவனத்திற்கு SHOW CAUSE கடிதம் கொடுத்துள்ளார்.

தனியார் கல்வி நிறுவனத்துடன் இணைந்து மோசடி செய்ததாக சென்னையில் ஒரு EPF அதிகாரி கைது செய்யப்பட்டிருக்கும் சூழ்நிலையில் நேர்மையாக நாகர்கோவில் EPF அதிகாரி SHOW CAUSE NOTICE கொடுத்துள் ளார். கடிதம் கொடுத்த விவரத்தை யும் தமிழ் மாநில அலுவலகத்திற்கும் தெரிவித்துள்ளார். நாகர்கோவில் EPF அதிகாரியைப் பாராட்டு கின்றோம்.

தமிழ்நாட்டில் BSNL ல் மட்டும் சுமார் 40 ஒப்பந்தகாரர்கள் இருப்பதாகவும் அதில் 5 500 ஒப்பந்த தொழிலாளர்கள் வேலை செய்வதாகவும் தமிழ் மாநில நிர்வாகம் RTI மூலம் தகவல் தெரிவித்துள்ளது. ஒப்பந்தத் தொழிலாளர் களுக்கு பல கோடி ரூபாய சம்பளமாக பண பரிமாற்றம் செய்யப்பட்டு வருகின்றது. அதேபோல் EPF க்கும் பல கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு வருகின்றது.

இந்த பணம் முறையாக ஒப்பந்த தொழி லாளர்களின் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளதா என்று விசாரணை நடத்த வேண்டும் என்று நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். சென்னையில் EPF அதிகாரி கைது நாகர்கோவில் EPF அதிகாரியின் SHOW CAUSE NOTICE க்குப் பிறகு நமது கோரிக்கை மேலும் வலுப் பெறுகிறது. உடனடியாக விசாரணை நடத்தும்படி மாநில மற்றும் அனைத்து மாவட்ட நிர்வாகங்களையும் மறுபடியும் கேட்டுக் கொள்கிறோம்

ஊதிய மாற்றம் உண்டா? இல்லையா?

28.01.2016 அன்று பெங்களூருவில் பத்திரிக்கையாளர்களை சந்தித்த BSNL CMD திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா, BSNL நிறுவனம் லாபம் ஈட்டவில்லையெனில் BSNL ஊழியர்கள் 01.01.2017 முதல் ஊதிய மாற்றம் பெற மாட்டார்கள் என தெரிவித்துள்ளார். இது நிர்வாகத்தின் பார்வை. ஆனால் BSNL ஊழியர் சங்கம் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பல ஆண்டுகளாக கருவிகள் வாங்கப்படாத காரணத்தால் "VOICE CALL BUS"ஐ BSNL நிறுவனம் தவறவிட்டு விட்டதாக முன்னர் நமது CMDயே ஒத்துக் கொண்டுள்ளார். கடந்த ஆட்சியாளர்கள் பத்து ஆண்டு காலமாக BSNL நிறுவனத்தை வளரவிடாமல் தடுத்தார்கள் என மாண்புமிகு தொலைத்தொடர்பு அமைச்சரே பாராளுமன்றத்தில் தெரிவித்தார். எனவே BSNL நஷ்டமடைவதற்கு அதன் ஊழியர்கள் காரணமல்ல, ஆனால் அரசாங்கமும் அமைசர்களுமே காரணம். மறுபுறம் இந்த நிறுவனத்தை புத்தாக்கம் செய்வதற்கு அனைத்து முயற்சிகளையும் BSNL ஊழியர்கள் மேற்கொண்டு வருகின்றனர். 'வாடிக்கையாளர் மகிழ்விப்பு வருடம்' மற்றும் 'புன்னகையுடன் சேவை' ஆகியவைகளே இதற்கு சான்று. எனவே கடந்த அரசும், அமைச்சர்களும் செய்த குற்றங்களுக்கு ஊழியர்களை நிர்வாகம் தண்டிப்பது சரியாக இருக்காது. 01.01.2017 முதல் ஊழியர்களும், அதிகாரிகளும் ஊதிய மாற்றம் பெற்றாக வேண்டும். அடுத்த ஊதிய மாற்றம் மறுக்கப்படும் என்றால் 100 சதவிகித வேலை நிறுத்தம் நடைபெறும் என்பதை நிர்வாகம் புரிந்து கொள்ள வேண்டும்.

சிறந்த சேவை தருவது நமது கடமை. எனவே 'புன்னகையுடன் சேவை' - 100 நாள் திட்டத்தை வெற்றிகரமாக்குவோம். BSNL நிறுவனத்தை பாதுகாப்போம். அதே சமயம் நமது நியாயமான ஊதிய மாற்றம் மறுக்கப்படும் என்று சொன்னால், வேலை நிறுத்த போராட்டம் மூலம் பெறுவதற்கும் நாம் தயாராக இருப்போம்.

மலை முழுங்கி மகாதேவன்களும் மண்டியிட்டு கிடக்கும் மத்திய அரசும்

தொலைத்தொடர்பு சேவை நிறுவனமான வோடபோன் ரூ.14,200 கோடி வரிபாக்கியை உடனடியாகச் செலுத்துமாறு வருமான வரித்துறையினர் நினைவூட்டுக் கடிதம் (?) அனுப்பியுள்ளனர். வரிபாக்கியை செலுத்த வில்லையெனில் சொத்துக்களை பறிமுதல் செய்வதாகவும் வருமான வரித்துறையினர் எச்சரித்துள்ளனர் (?).

2007-ம் ஆண்டு ஹட்சிசன் வாம்பா நிறுவனத்தின் இந்திய தொலைதொடர்பு வர்த்தகத்தை 11 பில்லியன் டாலர்களுக்கு வோடபோன் வாங்கிய காலத்திலிருந்து இந்த ரூ.14,200கோடி வரிபாக்கி இருந்து வருகிறது என்பதை வருமான வரித்துறையினர் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்த நோட்டீஸை உறுதி செய்த வோடபோன் செய்தித் தொடர்பாளர் ஒருவர், "வருமான வரித் துறையினரிடமிருந்து நோட்டீஸ் வந்துள்ளது. அதில் வரி பாக்கியைச் செலுத்தவில்லையெனில் சொத்துகள் பறிமுதல் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது" என்றார். இந்த வரி நிலுவை விவகாரம் தான் தற்போது சர்வதேச தீர்ப்பாயத்திடம் உள்ளது என்று மேலும் தெரிவித்தார். ஹட்சிசன் நிறுவனத்தை வாங்கிய விவகாரம் தொடர்பாக வரி நிலுவை இல்லை, காரணம் இதற்கான நடவடிக்கை இந்தியாவுக்கு வெளியே நடைபெற்றது என்று கூறுகிறது வோடபோன். ஆனால் வரிவிதிப்புத் துறையினர் கூறுவது என்னவென்றால், இந்தியாவில் உள்ள சொத்துக்கள் மூலம் இந்த நடவடிக்கைகளில் வோடபோன் பெரிய ஆதாயம் ஈட்டியது என்று வாதிடுகின்றனர். இது குறித்து வோடபோன் தனது அறிக்கை ஒன்றில், "2014-ம் ஆண்டு இந்திய அரசு கூறும்போது ஏற்கெனவே உள்ள வரிப்பிரச்சினைகள் ஏற்கெனவே உள்ள சட்ட நடைமுறைகள் மூலம் தீர்த்து வைக்கப்படும் என்று கூறியது. பிரதமர் மோடி அதிக வரி விதிப்பற்ற ஒரு வர்த்தகச் சூழல் பற்றி உறுதி அளித்து வருகிறார், ஆனால் இந்த நோட்டீஸ் அதற்கு சற்றும் தொடர்புடையதாக இல்லை" என்று கூறியுள்ளது.

13.02.2016 அன்று இந்தியாவில் தயாரிப்போம் வாரம் என்ற நிகழ்ச்சியை தொடங்கி வைத்து பேசிய பிரதமர் மோடி, "வரிவிதிப்பை பொறுத்தவரையில் நாங்கள் நிறைய திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளோம். அதாவது முன் தேதியிட்ட வரிவிதிப்பு கிடையாது. இதனை நான் மீண்டும் ஒரு முறை வலியுறுத்துகிறேன். மேலும் எங்கள் வரிவிதிப்பு திட்டங்களை ஸ்திரமானதாகவும், வெளிப்படைத்தன்மையுடன் அமைக்க பாடுபட்டு வருகிறோம்" என்று கூறியிருந்தார். முன்னதாக உச்ச நீதிமன்ற தீர்ப்பு ஒன்று வோடபோனுக்கு சாதகமாக வெளி வந்ததையடுத்து 2012-ல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி வருமான வரி சட்டங்களில் சில திருத்தங்களைக் கொண்டு வந்து முன்னோக்கிய வரிவிதிப்புக்கு சாதகமாகச் செய்தது. வோடபோன் செலுத்த வேண்டிய வரித்தொகை ரூ.7,990 கோடி. ஆனால் வட்டி, அபராதம் ஆகியவை சேர்ந்து மொத்தமாக ரூ.20,000 கோடியில் வந்து தற்போது நிற்கிறது.???

இன்னும் எத்தனை கடிதம் எழுதுவார்களோ?

நன்கொடைக்கு நன்றி

தருமபுரி மாவட்டம் ஓசூர் தோழர்.தனபால் பணி ஓய்வை ஒட்டி மாநில சங்கத்திற்கு ரூ.2000/- நன்கொடை வழங்கியுள்ளார். அவருக்கு நமது நெஞ்சார்ந்த நன்றி

வாழ்த்துகிறோம்

திருச்சி மாவட்டச்சங்கத்தின் அமைப்பு செயலரான தோழர்.கே.தியாகராஜன் அவர்களின் புதல்வி. செல்வி டி.தமிழரசி 2015ல் நடைபெற்ற சி.ஏ. இறுதித் தேர்வில் முதல் முயற்சியிலேயே தேர்வு பெற்று அகில இந்திய அளவில் 151 வது ரேங்க் பெற்றுள்ளார். அவர் மென் மேலும் வளர மாநில சங்கத்தின் மனதார வாழ்த்துக்கள்.

சென்னையில் அகில இந்திய மாநாடு

BSNL ஊழியர் சங்கத்தின் அடுத்த அகில இந்திய மாநாட்டை தமிழ் மாநிலம் நடத்துவது என ஏற்கனவே முடிவு செய்யப்ப ட்டுள்ளது உங்கள் அனைவருக்கும் தெரியும். வேலூரில் நடைபெற்ற மாநில செயற்குழுவில் வருகின்ற சார்பாளர்களின் வசதிக்கேற்ப அந்த அகில இந்திய மாநாட்டை சென்னையில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக விவாதிக்கப்படும் போது ஆம்பூர் தோழர் D.ராஜேந்திரன் அகில இந்திய மாநாட்டு நிதியாக ரூபாய் 11,000 வழங்குவதாக தெரிவித்தார். உடனே அங்கிருந்த தோழர்கள் அங்கேயே அகில இந்திய மாநாட்டு நன்கொடையாக ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் வழங்குவதாக தெரிவித்தனர். தோழர் P.இந்திரா ரூ.25,000/-மும், சென்னை CGM(O) தோழர் D.ராமலிங்கம் ரூ25,000/-மும், தோழர் L.பரமேஸ்வரன் ரூ.22,000/-மும், தோழர் V.வெங்கட்ராமன் ரூ.11,000மும், தோழர் S.K.புருஷோத்தமன் ரூ10,000/-மும், தோழர் C.சுவாமிகுருநாதன் ரூ.10,000/-மும், வேலூர் முன்னாள் மாவட்ட செயலாளர் தோழர் C.ஞானசேகரன் ரூ.2,000/-மும் வழங்கி ஒரு சிறந்த துவக்கத்தை உருவாக்கினார்கள். அவர்களுக்கு தமிழ் மாநில சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

மத்தியசங்கத்தின் ஒப்புதலோடு அகில இந்திய மாநாட்டினை நடத்துவதற்காக சென்னை தேனாம்பேட்டையில் உள்ள காமராஜர் அரங்கத்தை 2016, டிசம்பர் 31, 2017 ஜனவரி 1,2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் முன்பதிவு செய்யப்பட்டு விட்டது. தங்கும் இடங்களை பதிவு செய்யும் பணிகளும் நடைபெற்று வருகின்றது. நாடே போற்றும் நல்லதொரு அகில இந்திய மாநாட்டை நாம் அனைவரும் இணைந்து நடத்திடுவோம்.

வெள்ள நிவாரணம்

கடந்த நவம்பர், டிசம்பர் மாதத்தில் சென்னை, கடலூர் மற்றும் பாண்டிச்சேரி மாவட்டங்களில் ஏற்பட்ட மழை மற்றும் பெருவெள்ளத்தால் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டது நம் அனைவருக்கும் தெரியும். அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நமது தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் பெரிய அளவில் நிவாரண உதவிகள் வழங்கியதும், சென்னையில் உள்ள MMDA காலணியில் உள்ள பேருந்து நிலையம், தெருக்கள் மற்றும் அரசுப்பள்ளியை நாம் தூய்மைப்படுத்தியதையும் பெருமிதத்துடன் நினைவுபடுத்த விரும்புகிறோம். அத்துடன் இந்த பகுதிகளில் கடுமையாக பாதிக்கப்பட்ட ஒப்பந்த ஊழியர்கள் பலருக்கும் நாம் நிவாரணப் பொருட்களையும் வழங்கியுள்ளோம்.

அத்துடன் நில்லாமல் இந்த பகுதிகளில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள நமது ஊழியர்களுக்கு வெள்ள முன்பணம் (FLOOD ADVANCE) வழங்க வேண்டும் என சென்னைக்கு வந்த நமது CMD BSNL அவர்களிடம் தமிழக FORUM த்தின் சார்பாக மகஜர் ஒன்றையும் கொடுத்திருந்தோம். அவரும் அதனை ஏற்றுக் கொண்டு FLOOD ADVANCE வழங்க ஒப்புக் கொண்டிருந்தார்.

இந்த மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த 1600 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் FLOOD ADVANCE வேண்டி விண்ணப்பம் கொடுத்திருந்தனர். இதற்கான ஒப்புதலை வேண்டி நமது மாநில நிர்வாகமும் கார்ப்பரேட் அலுவலகத்திற்கு கடிதம் எழுதி இருந்தது. ஆனால் பதில் வராமல் இருந்தது. இதனை நமது மத்திய சங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தோம்.

09-02-2016 அன்று நமது துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன்சக்கரவர்த்தி அவர்களும், உதவி பொதுசெயலாளர் தோழர் S.செல்லப்பா அவர்களும் கார்ப்பரேட் அலுவலகம் சென்று உடனடியாக FLOOD ADVANCE ஐ SANCTION செய்ய வேண்டுமென வலியுறுத்தினர். நமது தமிழ் மாநில நிர்வாகம் கார்ப்பரேட் அலுவலகத்திற்கு எழுதிய கடிதத்தின் நகலையும் GM(BGT) அவர்களிடம் வழங்கினர். நமது மத்திய சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று அதே நாளில் தமிழகம் மற்றும் சென்னையில் வெள்ளம் பாதித்த பகுதியில் உள்ள ஊழியர்களுக்கு முன் பணம் வழங்குவதற்கு ஒப்புதலை கார்ப்பரேட் அலுவலகம் வழங்கியது. அனைவருக்கும் வெள்ள முன்பணம் கிடைத்துள்ளது. வெள்ள முன்பணம் (FLOOD ADVANCE) வழங்குவதற்கு கடும் முயற்சி எடுத்த அகில இந்திய சங்கத்திற்கு நமது மனமார்ந்த பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறோம். இதற்கான முயற்சிகளில் ஈடுபட்ட PGM(Fin) திரு.ரவி அவர்களுக்கும் தமிழ் மாநில சங்கத்தின் நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

முதலைக் கண்ணீர்

BSNL நிறுவனம் இதர தனியார் நிறுவனங்களை பரிசீலிக்காமல் ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்துடன் INTRA CIRCLE ROAMING (ICR) உடன்பாட்டை போட முயற்சிப்பதாக தனியார் தொலை தொடர்பு நிறுவனங்களின் கூட்டமைப்பான **COAI** அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை மிகவும் தவறானது. ஒரு தொலைதொடர்பு நிறுவனத்தின் மொபைல் நெட்வொர்க் ஓரிடத்தில் இல்லையென்றால் அதன் வாடிக்கையாளருக்கு மற்றொருதொலை தொடர்பு நிறுவனத்தின் சேவையை பயன்படுத்திக் கொள்ளும் படியாக இரண்டு தொலைதொடர்பு நிறுவனங்கள் ஏற்படுத்திக் கொள்ளும் உடன்பாடு தான் INTRA CIRCLE ROAMING என்பது. BSNLன் நிதி நெருக்கடி காரணமாக தனது நெட்வர்க்கை உடனடியாக விரிவாக்கம் செய்ய அதிகப் படியான நிதியினை செலவு செய்யும் நிலையில் அது இல்லை. எனவே அதன் சந்தாதாரர்களுக்கு சிறப்பான சேவையை உறுதி செய்ய தனியார் நிறுவனங்களுடன் ICR ஒப்பந்தம் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்காக BSNL நிறுவனம் ஏற்கனவே ஏர்டெல், வொடா போன் மற்றும் ஐடியா உள்ளிட்ட தனியார் நிறுவனங்களை அணுகியது. ஆனால் BSNLன் சேவைகளின் தரத்தை மேம்படுத்த அந்த நிறுவனங்கள் விரும்பாத காரணத்தால் அந்த நிறுவனங்கள் BSNL நிறுவனத்தோடு ICR உடன்பாட்டிற்கு வரவில்லை. ஏர்செல் நிறுவனம் மட்டுமே முன்வந்தது. இந்த சூழ்நிலையில் BSNL உடன் ICR ஒப்பந்தத்திற்கு ரிலையன்ஸ் நிறுவனம் விருப்பம் காட்டியது. காரணம் குரல்வழி சேவை தருவதற்கான 2G ஸ்பெக்ட்ரம் ரிலையன்ஸ் நிறுவனத்திடம் இல்லை. ஏற்கனவே ரிலையன்ஸ் நிறுவனம் தங்களை போட்டியில் இல்லாமல் செய்துவிடும் என்ற அச்சத்தின் பிடியில் ஏர்டெல், வொடா போன் மற்றும் ஐடியா ஆகிய நிறுவனங்கள் உள்ளன. எனவே தான் BSNL மற்றும் ரிலையன்ஸ் ஜியோ ஆகியவற்றிற்கு இடையே ICR உடன்பாடு ஏற்படுவதை அந்த நிறுவனங்கள் விரும்ப வில்லை.ரிலையன்ஸ் ஜியோவின் கடும் போட்டியில் இருந்து தங்களை பாதுகாக்கவே இவ்வாறான அறிக்கையினை அவர்கள் விட்டுள்ளனர். தவறுகளுக்கு பெயர் போன ரிலையன்ஸ் நிறுவனத்தோடு எந்த ஒரு உடன்பாடு போடும் போதும் கடுமையான எச்சரிக்கை உணர்வோடு இருக்க வேண்டும் என CMD BSNLஐ ஏற்கனவே சந்தித்து FORUM தலைவர்கள் எச்சரித்து உள்ளனர். 17.02.2016 அன்று நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தோழர் ஸ்வபன்சக்கரவர்த்தி Dy.GS மற்றும் தோழர் S.செல்லப்பா AGS ஆகியோர் CMDஐ சந்தித்து இது தொடர்பாக விவாதித்துள்ளனர். ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்துடன் எந்த ஒரு உடன்பாடு போடுவதற்கு முன்னர் FORUM த்தை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என அவர் உறுதி அளித்துள்ளார். எந்த ஒரு தனியார் நிறுவனத்திடம் எந்த ஒரு உடன்பாடு போடும் போதும் BSNLன் நலன்கள் பாதுகாக்கும் வகையில் BSNL ஊழியர் சங்கமும் FORUMமும் எச்சரிக்கையுடன் செயல்படும். எனவே தனியார் நிறுவனங்களின் முதலைக் கண்ணீரைக் கண்டு நமது தோழர்கள் ஐயப்பட தேவையில்லை. ●

AIBDPA அகில இந்திய மாநாடு

AIBDPA சங்கத்தின் 2ஆவது அகில இந்திய மாநாடு 2016 பிப்ரவரி 2 மற்றும் 3ஆம் தேதிகளில் அதன் தலைவர் தோழர் அனந்த பட்டாச்சார்ஜி தலைமையில் ஆந்திர மாநிலம் திருப்பதியில் நடைபெற்றது. நமது பொதுசெயலாளர் தோழர் P.அபிமன்யு, புரவலர் தோழர் VAN நம்பூதிரி உள்ளிட்ட பல தலைவர்கள் கலந்து கொண்டு உறையாற்றினர். அந்த மாநாட்டில் தோழர் அனந்த பட்டாச்சார்ஜி தலைவராகவும், தோழர் K.G.ஜெயராஜ் பொது செயலாளராகவும் தோழர் R.அரவிந்தன் நாயர் பொருளாளாராகவும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். நமது தமிழ் மாநிலத்தில் இருந்து தோழர் S.மோகன்தாஸ் அகில இந்திய துணைத் தலைவராகவும், தோழர் காளி பிரசாத் அகில இந்திய அமைப்பு செயலாளராகவும் மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். தோழர்களின் பணி சிறக்க தமிழ் மாநில சங்கத்தின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

விரிவடைந்த மாநில செயற்குழு முடிவுகள்

எதிர்வரும் 7ஆவது சரிபார்ப்பு தேர்தல் தொடர்பாக விவாதிக்க தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்தின் விரிவடைந்த மாநில செயற்குழு வேலூர் PATC மஹாலில் நமது அகில இந்திய உதவி பொது செயலாளரும், தமிழ் மாநிலத் தலைவருமான தோழர் S.செல்லப்பா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. எழுச்சியுடன் நடைபெற்ற இந்த விரிவடைந்த மாநில செயற்குழுவில் மாநில செயற்குழு உறுப்பினர்களுடன் 200க்கும் மேற்பட்ட கிளை செயலாளர்களும் பங்கேற்றனர்.

விரிவடைந்த மாநில செயற்குழுவில் தேசியக் கொடியினை மதுரை மாவட்ட செயலாளர் தோழர் S.சூரியன் அவர்களும், நமது சங்க கொடியினை தமிழ் மாநில உதவி தலைவர் தோழர் V.வெங்கட்ராமன் அவர்களும் விண்ணதிரும் கோஷங்களுக்கு இடையே ஏற்றி வைத்தனர். BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில அமைப்பு செயலாளர் தோழர் R.M.கிறிஸ்டோபர் அஞ்சலி உரை நிகழ்த்த அவை ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்தியது. BSNL ஊழியர் சங்கத்தின் உதவி மாநில செயலாளர் தோழர் S.சுப்ரமணி வந்திருந்த அனைவரையும் வரவேற்றார்.

தமிழ் மாநிலத் தலைவர் தனது தலைமை யுரையில் தமிழகத்தில் 7ஆவது சங்க அங்கீகார தேர்தலில் முதன்மை சங்கமாக வர நாம் அனைவரும் திட்டமிட்டு உழைத்திட வேண்டும் என்றும் சென்னையில் நடைபெற உள்ள அகில இந்திய மாநாட்டினை அனைவரும் பாராட்டும் வண்ணம் நடத்திட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். 12.02.2016 அன்று நடைபெற்ற மாநில செயற்குழுவின் முடிவுகளை தமிழ் மாநில செயலாளர் தோழர் A.பாபுராதாகிருஷ்ணன் விரிவடைந்த மாநில செயற்குழுவிற்கு விவரித்தார்.

இந்த விரிவடைந்த மாநில செயற்குழுவை துவக்கி வைத்த BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் மிகச் சிறப்பான எழுச்சியுரை ஆற்றினார். BSNLன் தற்போதைய நிலைமை, அதனை பாதுகாத்திட நமது மத்திய சங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் ஊழியர்களாகிய நாம் செய்ய வேண்டிய பணிகள் ஆகியவற்றை தெளிவாக எடுத்து ரைத்தார். அரசின் பொதுத்துறை விரோத கொள்கைகளை எடுத்துரைத்து பொது துறைகளை பாதுகாக்க நடைபெறும் இயக்கங்களில் நமது பங்கேற்பினை வலியுறுத்தி பேசினார். மேலும் BSNLல் உள்ள ஊழியர்களின் தீர்வு கண்ட பிரச்சனைகள் தொடர்பாகவும், நிலுவையிலுள்ள பிரச்சனைகளின் தீர்விற்காக நமது சங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் மிக விரிவான விளக்க உரை ஆற்றினார். BSNLஐ பாதுகாக்க, BSNL ஊழியர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண, 01.01.2017 முதல் நடைபெற வேண்டிய ஊதிய மாற்றத்தில் நல்லதொரு முன்னேற்றம் கண்டிட BSNL ஊழியர் சங்கம் வெற்றி பெற வேண்டியதின் அவசியம் பற்றியும் அவர் விவரித்தார். தமிழகத்தில் இந்த முறை முதன்மை சங்கமாக வரவேண்டும் என்று கேட்டுக் கொண்ட அவர் அதற்காக அனைத்து தோழர்களும் சிறப்புடன் பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அவரது உரை வந்திருந்த அனைவருக்கும் ஒரு தெளிவினை, உத்வேகத்தினை ஏற்படுத்தியது என்று சொன்னால் அது மிகையாகாது.

பின்னர் நடைபெற்ற விவாதத்தில் 18 மாவட்டங்களையும் சேர்ந்த 23 கிளை செயலாளர்கள் பங்கேற்றனர். தங்கள் மாவட்டத்தில் உள்ள வெற்றி வாய்ப்புகளையும், தாங்கள் ஆற்றவுள்ள பணிகள் தொடர்பாகவும் தெளிவான சிந்தனையுடன் அனைத்து தோழர்களும் பேசியது சிறப்பம்சமாகும்.

தோழர்களின் விவாதத்திற்கு பதில் அளித்து மாநில செயலாளர் உரை நிகழ்த்திய பின்னர் நமது அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா நிறைவுரைஆற்றினார்.

7ஆவது சங்க அங்கீகார தேர்தலில் தமிழகத்திலும் நாம் முதன்மை சங்கமாக வருவதை உறுதி செய்வதற்காக நடைபெற்ற இந்த செயற்குழுவை வளர்ந்து வரும் மாவட்டமாக இருந்த போதும் வேலூர் மாவட்டம் ஒரு பத்து நாட்கள் இடைவெளியில் சிறப்பாக செய்திருந்தது. மிகவும் எழுச்சியுடன் நடைபெற்ற இந்த விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழுவை வேலூர் மாவட்ட செயலாளர் தோழர் S.தங்கவேல் நன்றி கூறி முடித்து வைத்தார்.

'ஸ்டார்ட் அப் இந்தியா' என்றால் தொழிலாளர்களை சுரண்டுவது மேலும் சுரண்டுவதுமேலும் மேலும் சுரண்டுவது

'ஸ்டார்ட் அப்' என்ற பெயரிலான திட்டத்தின் கீழ் கம்பெனி தொடங்குவோருக்கு தொழிலாளர் சட்டங்களிலிருந்து விதி விலக்கு அளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. பிரதமர் மோடி தலைமையிலான பாஜக அரசு அறிவித்துள்ள 'ஸ்டார்ட்அப்' கம்பெனிகள் என்ற தொழில்களை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் தொழில் தொடங்கும் கம்பெனிகளுக்கு 9 தொழிலாளர் சட்டங்களிலிருந்து முழுமையான விதிவிலக்கு அளிக்க முடிவு செய்துள்ளது. இதில் ஏற்கெனவே தொடங்கப்பட்டு 5 ஆண்டுகளாக நடந்து வரும் கம்பெனிகளும் ஆண்டு வருமானம் ரூ.25 கோடிக்கு மிகாத கம்பெனிகளும் உள்ளடங்கும். இம்முடிவின்படி மத்திய அரசின் தொழிலாளர் துறை செயலாளர், கடந்த 12ம்தேதியிட்டு தொழிலாளர் சேம நல நிதித்துறை மற்றும் தொழிலாளர் காப்பீட்டுத் துறை உள்ளிட்ட தொழிலாளர் சட்டங்களின் படியுள்ள நலத்துறைகளின் தலைமை அதிகாரிகளுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அந்த கடிதத்தில், மோடி அரசின் முடிவை அமல்படுத்தும்படி கேட்டுக் கொண்டுள்ளார். 'இக்கம்பெனிகள் கீழ்க்கண்ட 9 தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்தி வருவதாக சுயமாக சான்றிதழ் அளித்துக் கொள்ளலாம் என்று மத்திய அரசின் தொழிலாளர் துறை செயலாளர் அறிவிப்பாணை வெளியிட்டுள்ளார். அந்த சட்டங்களாவன; 1. தொழில் தகராறு சட்டம் 1947, 2. தொழிற்சங்க சட்டம்1926, 3. கட்டிடங்கள் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டம் 1926, 4. தொழிற்சாலை நியமனச் சட்டம்(நிலை ஆணை)1946, 5. மாநிலங்களுக்கிடையிலான இடம் பெயரும் தொழிலாளர்கள் சட்டம் 1979, 6. ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம் (ஒழுங்குமுறை மற்றும் ஒழிப்பு) 1970, 7. தொழிலாளர் சேம நல நிதிச் சட்டம் 1952, 8. தொழிலாளர் காப்பீடு சட்டம் 1948. தொழில் நிறுவனங்கள் மற்றும் கம்பெனிகள் இச்சட்டங்களை அமல்படுத்தி விட்டதாக தாங்களே சான்றிதழ் அளித்து கொள்வது என்பதன் பொருள் இந்த நிறுவனங்களில் அரசின் தொழிலாளர் துறையிலிருந்து எந்த கண்காணிப்போ அல்லது ஆய்வோ இருக்காது என்பதுதான். இந்த நிறுவனங்களும் கம்பெனிகளும் தங்களது விருப்பம் போல இத்தகைய அடிப்படையான தொழிலாளர் சட்டங்களை மீறிக்கொள்ளலாம் என்பதுதான்.

"மோடிஜி நீர் வாழ்க!"- முதலாளிகள் குதூகலம்:- ஏற்கனவே பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பெரிய கார்ப்பரேட் கம்பெனிகள் மோடியின் 'ஸ்டார்ட் அப்' கம்பெனிகளின் பட்டியலில் வர ஆர்வம் காட்டுகின்றன. ஏனெனில் 'ஸ்டார்ட் அப்' கம்பெனிகளுக்கு 3 ஆண்டுகளுக்கு வரிகளிலிருந்து 'விடுமுறை' அளிக்கப் பட்டுள்ளது, அத்துடன் வரித்துறை அதிகாரிகளின் ஆய்விலிருந்து விதி விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது. இந்த சலுகைகளுடன் கூடுதலாக, சமூகப்பாதுகாப்பு மற்றும் தொழிலாளர்கள் நலத்திட்டங்கள் தொடர்பானவை உள்ளிட்டு அனைத்து அடிப்படைத் தொழிலாளர் சட்டங்களிலிருந்தும் விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது 'ஸ்டார்ட்அப்' கம்பெனிகளில் நியமிக்கப்படும் அல்லது ஏற்கனவே பணிபுரியும் தொழிலாளர்களை கிட்டத்தட்ட கொத்தடிமை முறையில் நடத்துவதாகும். இந்திய அரசு முதலீடுகளை ஊக்கப்படுத்துவது அல்லது அவர்களுக்கு சலுகைகள் அளிப்பது என்பது தொழிலாளர்களின் உரிமைகளை நசுக்குவதாகும். தொழிற்சங்கங்கள் அமைத்துக் கொள்ளும் உரிமையை மறுப்பதாகும். அனைத்து தொழிலாளர்களுக்கும் நலத் திட்டங்களின் பயன்களை மறுப்பதாகும், மோசமான ஒப்பந்த முறையை ஊக்குவிப்பதாகும், அடிப்படையான சமூக பாதுகாப்பு பயனான தொழிலாளர் சேம நல நிதி மற்றும் தொழிலாளர் காப்பீடு உள்ளிட்ட நலத்திட்டங்களை மறுப்பதாகும். இத்தகைய பகிரங்கமான தொழிலாளர் விரோத திட்டங்கள் மோசடியான மற்றும் ஏமாற்றும் முறையில் முன் தள்ளப்படுகின்றன. தொழிற்சங்க இயக்கமானது இந்த திட்டங்களை கண்டிப்பதும் கடுமையாக எதிர்ப்பதும் அவசியமாகிறது. அனைத்து உழைக்கும் மக்களையும் தொழிற்சங்க இயக்கத்தையும் பாஜக அரசின் மோசடியான தொழிலாளர் விரோத திட்டங்களை அம்பலப்படுத்துவோம் முறியடிப்போம். ●

மத்திய சங்கத்திலிருந்து சில சிறப்பு செய்திகள்

அகில இந்திய சங்கப்பணிகளுக்காக தோழர் S.செல்லப்பா:- நமது மாநில தலைவரும், அகில இந்திய சங்கத்தின் உதவி பொது செயலாளருமான தோழர் S.செல்லப்பா அகில இந்திய மையத்தில் இருந்து பணியாற்றுவதற்காக பிப்ரவரி 1ஆம் தேதி டெல்லி சென்றுள்ளார்.

PMSஐ PLI உடன்இணைக்காதே:- புதிய PLI கமிட்டியை நிர்ணயம் செய்து வெளியிட்ட கடிதத்தில் PMSஐ PLI உடன் இணைத்து வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக ஏற்கனவே அப்போதிருந்த DIRECTOR(HR) ÂU A.N. ராய் அவர்களுடன் விவாதித்து நிறுவனத்தின் தேசிய அளவிலான உற்பத்தி திறனின் அடிப்படையில் PLI வழங்கப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்ட விஷயம். ஆனால் கார்ப்பரேட் அலுவலகத்தில் இருந்து இது போன்ற கடிதம் வெளியிடப்படுவது ஒரு மோசமான விஷயம். BSNL ஊழியர் சங்கம் தனது கடுமையான எதிர்ப்பினை DIRECTOR(HR) அவர்களிடம் தெரிவித்துள்ளது.

வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்:- 24.02.2016 அன்று GM(T&BFCI) அவர்களை நமது பொது செயலாளர் சந்தித்து வங்கிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக விவாதித்தார். அப்போது பேங்க் ஆஃப் மகராஷ்ட்ரா, சிண்டிகேட் வங்கி, HDFC வங்கி மற்றும் J&K வங்கி ஆகியோற்றுடன் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒரு மாதத்திற்குள் ஏற்படுத்தப்படும் என GM(T&BFCI) தெரிவித்துள்ளார். கனரா வங்கியுடனான MOU புதுப்பிக்கும் பணி நடந்துவருகிறது. யூனியன் வங்கி ஒரு சில கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ளதால் அதனுடனான MOU புதுப்பிக்க வாய்ப்பு இல்லை. ரிசர்வ் வங்கி தனது வட்டி விகிதத்தை குறைத்துள்ளதால் ஊழியர்களின் கடனுக்கான் வட்டியையும் குறைக்க வேண்டும் என பொது செயலாளர் கேட்டுக் கொண்டார். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள GM உறுதி அளித்துள்ளார்.

இயக்குனர் குழு கூட்டம்:- அடுத்த இயக்குனர் குழுக் கூட்டம் 04.03.2016 அன்று நடைபெற உள்ளது. BSNL ஊழியர் சங்கத்தின் தொடர் வற்புறுத்தலின் காரணமாக ஊழியர்களின் பெயர் மாற்றம், நேரடி நியமன ஊழியர்களின் ஓய்வூதிய பங்கீட்டிற்காக 3% அடிப்படை ஊதியத்தில் வழங்குவது, E1 ஊதிய விகிதம், விடுபட்ட 01.01.2007க்கு பின்னர் பணி நியமனம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கான கூடுதல் ஒரு இன்கிரிமெண்ட் மற்றும் காசுவல் ஊழியர்களுக்கான பணிக்கொடை ஆகிய விஷயங்கள் இந்தக் கூட்டத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும் என GM(Estt) திருமிகு மது அரோரா அவர்கள் நமது பொது செயலாளரிடம் தெரிவித்துள்ளார்.

மைக்ரோ மற்றும் நானோ சிம்கார்ட்கள் பற்றாக்குறை:- பல மாநிலங்களில் இருந்து மைக்ரோ மற்றும் நானோ சிம்கார்ட்கள் பற்றாக்குறையாக உள்ளதாக மத்திய சங்கத்திற்கு தகவல் வந்ததின் அடிப்படையில் நமது மத்திய சங்கம் CMD BSNLக்கு உடனடியாக ஒரு கடிதம் எழுதியுள்ளது.

JTO LICE தேர்வு:- ஜோத்பூர் CAT தீர்ப்பின் காரணமாக JTO LICE தேர்வுகளை ஒவ்வொரு வருட காலிப்பணியிடங்களின் அடிப்படையில் JTO RR 2001ன் படி நடத்துவது என கார்ப்பரேட் அலுவலகம் முடிவு எடுத்திருந்தது. இந்த முடிவின் மீதான கடுமையான ஆட்சேபனையை நமது மத்திய சங்கத்தின் சார்பாக DIRECTOR(HR) அவர்களை BSNL ஊழியர் சங்கத்தின் சார்பாக சந்தித்த தோழர் P.அபிமன்யு GS, தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS மற்றும் தோழர் S.செல்லப்பா AGS ஆகியோர் தெரிவித்தனர். அதன் அடிப்படையில் JTO RR 2001ன் படி தேர்வு நடத்துவது என்று எடுக்கப்பட்ட முடிவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. JTO RR 2014ன் படி தேர்வு நடைபெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் நமது மத்திய சங்கம் எடுத்து வருகிறது.

தேர்வு கட்டணத்தை திரும்ப பெறு:- எதிர்வரும் JTO(T) LICE தேர்வுகளுக்கு 500 ரூபாய், 250 ரூபாய் என கட்டணம் செலுத்த வேண்டும் என BSNL நிர்வாகம் அறிவித்துள்ளது. இதனை ஏற்க முடியாது, உடனடியாக திரும்ப பெற வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கடிதம் எழுதியுள்ளது.

JTO LICE மற்றும் TTA LDCE தேர்வு முடிவுகள் மறுபரிசீலனை:- 01.02.2016 அன்று DIRECTOR (HR) திருமதி சுஜாதாராய் அவர்களை சந்தித்த நமது பொதுசெயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் 2013ல் நடைபெற்ற JTO LICE

தேர்வுகளில் தவறான கேள்விகளுக்கு முழுமையான கூடுதல் மதிப்பெண்கள் வழங்கப்படாத மாநிலங்களில் தேர்வு முடிவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொண்டார். அதே போல மகாராஷ்ட்ரா மாநில TTA LDCE தேர்வு முடிவுகளையும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார். தேவையானவற்றை செய்வதாக DIRECTOR(HR) உறுதி அளித்தார். பொது செயலாளர் GM(RECT) திரு D.சக்கரவர்த்தி அவர்களையும் சந்தித்து இந்த பிரச்சனைகளை தாமதமின்றி மறுபரிசீலனை செய்யக் கேட்டுக் கொண்டார்.

சிவில் மற்றும் எலக்ட்ரிகல் JTO LICE தேர்விற்கான சேவை தகுதியை குறைத்திடு:- BSNL ஊழியர் சங்கத்தின் முயற்சியின் காரணமாக JTO(T) LICE தேர்விற்கான சேவை தகுதியை ஐந்து ஆண்டுகளாக குறைக்கப்பட்டு விட்டது. ஆனால் சிவில் மற்றும் எலக்ட்ரிகல் JTO LICE தேர்விற்கான தகுதி மட்டும் பத்தாண்டுகளாக உள்ளது. இதனையும் ஐந்தாண்டுகளாக குறைக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கோரிக்க வைத்துள்ளது.

7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பிற்கான மனுதாக்கல் செய்யப்பட்டது:- 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலுக்கான வேட்பு மனுவினை நமது மத்திய சங்கத்தின் சார்பில் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS மற்றும் தோழர் S.செல்லப்பா AGS ஆகியோர் 09.02.2016 அன்று தாக்கல் செய்துள்ளனர். கடந்த தேர்தலுக்கு பின் BSNLஐ பாதுகாக்கவும், BSNL ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை தீர்வு காண்பதிலும் நமது மத்திய சங்கம் பெரும்பங்காற்றியுள்ளதால் இந்த தேர்தலில் நமது BSNL ஊழியர் சங்கம் கூடுதல் வாக்கு வித்தியாசத்தில் முதன்மை சங்கமாக வெற்றி பெரும் என்பது உறுதி.

பரிவு அடிப்படையிலான பணி நியமனத்தில் முக்கிய மாற்றம்:- பணியில் இருக்கும் போது ஏற்படும் விபத்தில் இறக்கும் ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பரிவு அடிப்படையிலான் பணி நியமனம் வழங்கப்பட வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கோரிக்கை வைத்து விவாதித்து வந்தது. கார்ப்பரேட் அலுவலகம் இந்த கோரிக்கையினை ஏற்று அதற்கான உத்தரவினை வெளியிட்டுள்ளது.

தொலைபேசி நிலையங்களில் உள்ள லேண்ட் லைன் இணைப்புகளுக்கு இலவச அழைப்பு:- தொலைபேசி நிலையங்களில் உள்ள MDF/TEST LINE தொலைபேசிகளுக்கு இலவச சிம் கார்டிலிருந்து அழைக்கப்படும் அழைப்புகளுக்கு கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. நமது மத்திய சங்கம் இந்த கோரிக்கையை தேசியக் கவுன்சில் கூட்டத்தில் எழுப்பியதின் அடிப்படையில் இந்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கான உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது.

விஜய் டீம் ஊழியர்களுக்கான இன்செண்டிவ்:-BSNL நிறுவனம் டிசம்பர் 2015ல் 17.5 லட்சம், ஜனவரி 2016ல் 20.70 லட்சம் என அதிகப்படியான இணைப்புகளை கணக்கில் கொண்டு விஜய் டீம் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இன்செண்டிவ்களை அக்டோபர் 2015க்கு பின்பும் நீட்டிக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

●

BSNL மீண்டும் சாதனை- ஜனவரியில் 20 லட்சம் மொபைல் தொலை பேசி இணைப்புகள்

ஜனவரி மாதத்தில் BSNL நிறுவனம் 20 லட்சம் தொலைபேசி இணைப்புகளை கொடுத்துள்ளது. இது ஒரு புதிய சாதனை. டிசம்பர், 2015ல் 17.5 லட்சம் இணைப்புகளை கொடுத்த BSNL இந்த மாதம் இந்த வியத்தகு சாதனயினை நிகழ்த்தியதற்காக அனைத்து ஊழியர்களையும் அதிகாரிகளையும் BSNL ஊழியர் சங்கம் மனமார வாழ்த்துகிறது. அதிகப்படியான இணைப்புகளை கொடுத்த மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் 1,80,839 புதிய மொபைல் இணைப்புகளை வழங்கி மூன்றாம் இடம் பெற்றுள்ளது. இதனை முதலிடத்திற்கு கொண்டு வர உறுதியேற்போம்.

பணி ஓய்வு

தோழர். **ஏ.ஜெயபாண்டியன்**



20-7-1979 ல் இலாகாவில் பணிக்கு சேர்ந்த் தோழர். ஏ.ஜெயபாண்டியன், டி.எம். சிவகாசி, அவர்கள் 37 ஆண்டு சேவைக்குப்பின் 30-1-2016 ல் ஓய்வு பெற்றார். 25 ஆண்டுகள் சிவகாசி ஓ.சி.பி கிளைச் செயலராகவும், பல ஆண்டுகள் மாவட்டசங்க நிர்வாகியாகவும் பணியாற்றிய இவர் சிறந்த சேவைக்கான "சஞ்சார்ஸ்ரீ" விருது பெற்றவர். Local கவுன்ஸில் உருப்பினராகவும் பணியாற்றிய இந்த தோழர் தனது பணிஒய்வை முன்னிட்டு கிளை, மாவட்ட, மாநில மட்டங்களுக்கும், ஒப்பந்த ஊழியர் சங்கத்துக்கும் தலா ரூ.500/- நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தோழர்.**பி.செல்லமுத்து**

தோழர்.பி.செல்லமுத்து STS, 3-9-1980 ல் தொலைபேசி இயக்குனராக இலாகாவில் சேர்ந்தார். 1982 முதல் வெள்ளக்கோவில், காங்கேயம் பகுதிகளில் பணியாற்றி பின் 31-12-2015ல் பணி ஓய்வு பெற்றார். சங்கம் கொடுத்த அனைத்து அறைகூவல்களிலும் முன்னணியில் நின்றவர்.2012 முதல் BSNLEU வின் ஈரோடு மாவட்ட உதவி செயலராக சிறப்பாக பணியாற்றி வருகிறார்.TNTNCW சங்கத்தின் மாவட்டத் தலைவராகவும் திறம்பட பணியாற்றி வருகிறார்.தனது பணி ஒய்வை முன்னிட்டு மாநில மத்திய சங்கங்களுக்கு தலா ரூ 500 நன்கொடை வழ்ங்கியுள்ளார்.

தோழர்.**எஸ்.நடராஜன்**

தோழர்.எஸ்.நடராஜன், STS காங்கேயம் அவர்கள் 7-12-77 ல் இயக்குனராக பல்லடத்தில் சேர்ந்தார். 31-12-15 ல் பணி ஓய்வு பெற்றார். K.G போஸ் அணியில் தன்னை இணைத்துக் கொண்டு ஈரோடு மாவட்டத்தில் நமது சங்கத்தை வளர்த்தெடுக்க அரும்பாடு பட்டார். மாற்றுச் சங்கத்தால் போலீஸில் பொய் புகார் கொடுக்கப்பட்டார். K.G போஸ் கலைக்குழுவில் தன்னை இணைத்துக் கொண்டு தமிழகம் முழுதும் பிரச்சாரம் செய்தவர். கிளைத் தலைவராக, மாவட்டச் சங்க நிர்வாகியாக என பல பொறுப்புக்களை வகித்தவர். அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றவர்.இடது சாரி கண்ணோட்டத்தில் உறுதியானவர். தனது பணி ஒய்வை முன்னிட்டு கிளைக்கு ரூ1000/-ம், மாவட்ட, மாநில சங்கங்களுக்கு தலா ரூ.2000/-ம் அகில இந்தியசங்கத்துக்கு ரூ 1000/-ம் நன்கொடை வழங்கியுள்ளார்.



தோழர்.**என்.காந்தி**

தோழர்.என்.காந்தி, TM ஈரோடு அவர்கள் 31-12-15 ல் இலாகாவிலிருந்து ஓய்வு பெற்றார். திண்டுக்கல்லில் TM ஆக பணியாற்றி வந்த் இவர் ஈரோட்டிற்கு மாற்றலில் வந்தார்.. பணியில் சேர்ந்தது முதல் நமது சங்கத்தின் தீவிர உறுப்பினர். தனது பணி ஒய்வினை முன்னிட்டு அனைத்து மட்டங்களுக்கும் ரூ.1000/- நன்கொடை வழங்கியுள்ளார்.



தோழர்.**என்.கருப்புசாமி**

தோழர்.என்.கருப்புசாமி CTM சாத்தூர் அவர்கள் 1-4-1975 ல் இலாகாவில் பணிக்கு சேர்ந்து 30-11-2015ல் ஓய்வு பெற்றார். சங்கத்தின் மீது மிகுந்த பற்று கொண்ட அவர் செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்திலும் பங்கு கொண்டவர். மத்திய, மாநில சங்கங்களுக்கு தலா ரூ.2000/-ம் மாவட்ட சங்கத்துக்கு ரூ.1000/-ம் கிளைக்கு ரூ.500/- ம் நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர்.**என்.செல்வராஜ்**

தோழர்.என்.செல்வராஜ் TM தருமபுரி மாவட்டம், பொம்மிடி தொலைபேசி நிலையத்தில் 1988 ல் RM ஆக பணியில் சேர்ந்து 31-12-15 ல் பணி ஓய்வு பெற்றார். ஆரம்ப காலம்



தொட்டே மாவட்ட நிர்வாகியாக, கிளை நிர்வாகியாக திறம்பட பணியாற்றிய தோழர். தொழிற் சங்கப்பணி மட்டுமன்றி சமூகப் பணியிலும் தன்னை இணைத்துக் கொண்ட தோழர், தனது பணி ஓய்வை ஒட்டி மாவட்டசங்கத்துக்கு ரூ.5000/-ம் கிளைசங்கத்துக்கு 3000/-ம் மாநிலசங்கத்துக்கு ரூ1000/-ம் ஒப்பந்த ஊழியர் சங்கத்துக்கு ரூ 1000/-ம் நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர்.**ஜி.வெள்ளைச்சாமி**

தோழர்.ஜி.வெள்ளைச்சாமி, TM திண்டுக்கல். மஸ்தூராக தனது இலாக வாழ்வை ஆரம்பித்து கடந்த 31-12-15ல் டெலிகாம் மெக்கானிக்காக தனது பணியை நிறைவு செய்தார். மதுரை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பணியாற்றியவர். தோழர் ஆரம்பம் முதலே K.G போஸ் அணியில் மிகவும் பிடிப்புடன் செயலாற்றி, கிளைச் செயலராக, மாவட்ட சங்க நிர்வாகியாக பல்வேறு பொறுப்புகளில் சிறப்பாக பணியாற்றியவர்.

தோழர். **கன்னியப்பன்**



27.07.1981ல் இலாகாவில் Gr.D ஆக பணியில் சேர்ந்த தோழர் கன்னியப்பன் CGM(O)தனது 34 ஆண்டு கால சேவையினை முடித்து 31.12.2015 அன்று ஜமேதாராக பணி ஓய்வு பெற்றுள்ளார். முன்னாள் முதல்வர் MGR இன் தீவிர ரசிகரான இவர் நமது சங்கத்தின் மீது மிகுந்த பற்று கொண்டு பணி யாற்றி வந்தார். நமதுசங்கம் விடுக்கும் அனைத்து இயக்கங்களிலும் பங்கேற்றுள்ள இவர் தனது பணி ஓய்வினை ஒட்டி தமிழ் மாநில சங்கத்திற்கு ரூ.500/- நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர். **எம்.முருகேசன்**

தோழர்.எம்.முருகேசன் TM எல்லீஸ், மதுரை. மஸ்தூர் காலம் தொட்டு K.G போஸ் அணியில் சிறப்பாக பணியாற்றி, லைன் மேனாக, டெலிகாம் மெக்கானிக்காக பதவி உயர்வு பெற்று அதிகமான காலம் மதுரையிலேயே பணியாற்றியவர். கிளைத் தலவராக, செயலராக திறம்பட பணியாற்றியவர். சங்க வளர்ச்சிக்காக பாடுபட்டவர்.

தோழர். **கோவிந்தன்**

தோழர். கோவிந்தன் TM வில்லாபுரம், மதுரை. பல்வேறு தொலைபேசி நிலையங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றார். இவர் மிகவும் அமைதியானவர். சங்கத்தின் மீது பற்று கொண்டு ஈடுபாட்டுடன் செயலாற்றியவர். இறுதியாக வில்லாபுரம் கிளையில் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

தோழர் **S.கம்பர் திருச்சி**

01.03.1979 அன்று டெலிகிராஃப் மேனாக கரூர் DTOவில் பணியில்சேர்ந்து T4 கிளைத் தலைவராக பல ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றிய தோழர்S.கம்பர் டெலி கிராபிஸ்டாக பதவி உயர்வு பெற்று நாமக்கல் மற்றும் கரூர் பகுதிகளில் பணியாற்றி விட்டு திருச்சிக்கு மாற்றலாகி வந்து தனது 36 ஆண்டு கால சேவையை செவ்வனே முடித்து திருச்சி MAIN GUARD GATE CSCயிலிருந்து 31.12.2015 அன்று பணிஓய்வு பெற்றுள்ளார். இறுதிவரை நமது சங்கத்தின் அனைத்து இயக்கங்களிலும் பங்கேற்ற தோழர் கம்பர் தனது பணி ஓய்வு சமயத்தில் நமது மாவட்ட மாநில சங்கங்களுக்கு தலா ரூ.500/- நன்கொடை வழங்கியுள்ளார்.

இலாகா பணிகளிலும், இயக்கப் பணிகளிலும் மிகச்சிறப்பாக பணியாற்றி, பணி ஓய்வு பெற்றுள்ள இந்த தோழர்களின் பணி ஓய்வு காலம் சிறக்க தமிழ் மாநில சங்கம் மனதார வாழ்த்துகிறது. ●

மார்ச் 8 - சர்வ தேச மகளிர் உரிமை தினம்

சமூகத்தில் சரி பாதியான மகளிருக்கு சம நீதி கிடைக்காத நிலையில், உரிமை முழக்கங்கள் எழுப்பிய அமெரிக்க உழைக்கும் மகளிரின் வேலை நிறுத்த தினமே மார்ச் 8 என்பதை நாம் அறிவோம்.

மகளிர் உரிமைகள் என்பது மனித உரிமைகள் என்பதைக் கூட ஏற்றுக் கொள்ளாத நிலைமை, பல நாடுகளில், இந்த நவீன யுகத்திலும் உள்ளது. மூலதனத்தின் எல்லை தாண்டிய பாய்ச்சலால் வலுவாகி வரும் வணிகக் கலாச்சாரம், 'அனைத்தும் லாபத்துக்கே!' என்பதை அடிப்படையாகக் கொண்டது. மனிதப் பண்புகளை உருக்குலைத்து வரும் இந்த வர்த்தக மயம், பெண்களையும் வணிகப் பொருளாக மாற்றி வருகிறது. லட்சக்கணக்கான பெண் கருக்கொலைகள், பெண் சிசுக்கொலைகள், 'காணாமல் போகும்' பெண்கள் என்று அன்றாட செய்திகளில் வரும் எண்ணிக்கையெல்லாம் இதனை எடுத்துக் காட்டுகின்றன.

பெண் பிறக்கவே கூடாது என பெண்களே நினைக்கும் அளவுக்கு நமது சமூக அமைப்பு பெண்ணுக்கு எதிரான சூழலில் உள்ளது .உடை உடுத்துதல், வீட்டிற்கு வெளியே செல்லுதல், வெளியாரோடு பழகுதல், கல்வி பெறுவது, வேலை வாய்ப்பு, காதல், திருமணம், பணியிடங்கள், தாய்மைப் பொறுப்பு, வீட்டு வேலை, பாலியல் துன்புறுத்தல், இலக்கியம், ஊடகம் என வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் சர்ச்சையையும், சண்டையையுமே பெண்கள் சந்திக்கின்றனர்.

நவீன தொலைதொடர்பு சாதனமான செல்போன் பேசக் கூடாது, பேசினால் ரூ. 2500 அபராதம் என்ற- இந்தியாவின் மாதிரி மாநிலம் என மாயத் தோற்றம் கொண்ட- குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் கட்டுப்பட்டி கிராமங்களின் ஜாதீய அமைப்புக்களின் ஆணைகள் அபத்தமாக, அபஸ்வரமாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இது போன்ற தடைகள் ஏராளம்.

ஆணவ வெறிக் கொலைகளை கௌரவக் கொலைகள் என்று பெயரிட்டு அரங்கேறி வருகின்றன. தங்கள் சுரண்டலுக்கான மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக, மதவாத, சாதீயவாத அடிப்படைவாதிகள், பெண்களைக் கூட்டுக்குள் அடைப்பதை பெண்களை மூளைச் சலவை செய்தே சாதித்திருப்பதையும், சாதித்து வருவதையும் நாம் கவனமாக ஆய்வு செய்ய வேண்டும். மாற்றுப் பாதையில் மகளிரை அணிதிரட்டி அழைத்து வரவேண்டும் என்ற மகத்தான பணிக்கு நம்மை- ஆண், பெண் என்ற இரு பாலாரையும் -மேலும் மேலும் ஆயத்தமாக்க வேண்டிய நாள் இது.

அனைத்து அவலங்களுக்கும் முடிவு கட்டும் விதத்தில், சிறையை உடைத்து, சிறகை விரித்து எண்ணற்ற மகளிர் கடந்த கால சரித்திரத்தில் தமது உரிமைகளை வென்றெடுத்துள்ளனர். இன்றும் மலாலா போன்ற பல பெண்கள், அடிமை முறைகளுக்கு எதிராக முஷ்டி உயர்த்தி பீடுநடை போட்டு முன்னேறி வருவதோடு, லட்சக் கணக்கான பெண்களுக்கு ஆதர்சமாகவும் ஒளிவீசி வருகின்றனர்.

வயல்வெளி டிராக்டர்களிலிருந்து வான்வெளி விமானங்கள் வரை அவர்கள் வாகனங்களை மட்டும் இயக்கவில்லை; ஆகாயத்தைக் கூராகப் பிளந்து பறக்க முற்படுகின்றனர். இந்தக் கூர்மையில் பழமைவாதிகளின் பஞ்சாங்கங்கள் கிழிந்து தூள்தூளாய்ப் பறக்கட்டும் !

வரலாற்றின் பக்கங்களில், பெண்களுக்கு அனைத்து சமஉரிமைகளையும் வழங்கியது பொதுவுடைமை அரசாங்கங்களே என்பதை அன்றைய சோவியத் ரஷ்யாவிலிருந்து இன்றைய கியூபாவரை பதிவு செய்து கொண்டிருக்கின்றன.

பொதுவுடைமை அதிகாரம் மகளிருக்கு அனைத்து உரிமைகளையும் உத்தரவாத மாக்கட்டும்! அதற்கான போராட்டப்பாதை பூக்களினால் ஆனதல்ல; புரட்சிகர உணர்வுகளினால் ஆனது என்பதை உரக்கச் சொல்வோம் இந்த உரிமை தினத்தில் ! ●

மார்ச் 10 - எதிர்ப்பு தினம்

செப்டம்பர்-2, 2015 வேலை நிறுத்தத்தின் தொடர்ச்சியாக 2016 மார்ச்-10ஆம் தேதி எதிர்ப்பு தினம் கடைபிடிக்கும்படி மத்திய தொழிற்சங்கங்கள் அறைகூவல் விட்டுள்ளன. பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்காதே, ஒப்பந்த ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக ரூ.15,000 என அறிவிக்க வேண்டும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக இந்த இயக்கத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டும் என அறைகூவல் விட்டுள்ளன. நாமும் அந்த இயக்கத்தில் முழுமையாக பங்கேற்போம்.

விரிவடைந்த மத்திய செயற்குழு

மஹாராஷ்ட்ரா மாநிலம் அஹமது நகரில் BSNL ஊழியர் சங்கத்தின் விரிவடைந்த மத்திய செயற்குழுக்கூட்டம் 19.02.2016 முதல் 21.02.2016 வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. BSNL ஊழியர்சங்கத்தின் அகில இந்திய தலைவர் தோழர் பல்பீர்சிங் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய சங்க நிர்வாகிகள், மாநில செயலாளர்களுடன் அனைத்து மாவட்ட செயலாளர்களும் பங்கேற்றனர். எதிர்வரும் ஏழாவது சங்க அங்கீகார தேர்தலை சந்திக்கும் உற் சாகத்துடன் தோழர்கள் பங்கேற்றஇந்த விரிவடைந்த மத்திய செயற்குழுவில் தேசியக்கொடியினை தலைவர் தோழர் பல்பீர்சிங் ஏற்றிவைக்க, நமது சங்கக் கொடியினை BSNL ஊழியர் சங்கத்தின் பொதுசெயலாளர் தோழர் P.அபிமன்யு விண்ணதிரும் முழக்கங்களுக்கிடையே ஏற்றிவைத்தார்.

தியாகிகள் ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் அனாம்பிரேம் என்கிற பார்வையற்றோர் அமைப்பின் சார்பாக உணர்ச்சிகரமான கலைநிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் மகாராஷ்ட்ரா மாநில செயலாளர் தோழர் நளவாடே, வரவேற்புக் குழுவின் தலைவர் தோழர் விட்டல்அவுட்டி, மற்றும் பொது செயலாளர் தோழர் விஜய்ஷிபங்கர் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள். இந்த விரிவடைந்த மத்திய செயற் குழுவை மஹாராஷ்ட்ரா மாநில CITU பொது செயலாளர் டாக்டர் கரட் துவக்கி வைத்தார். BSNL ஊழியர் சங்கத்தின் புரவலர் தோழர் VAN நம்பூதிரி மற்றும் அஹமதுநகர் பொதுமேலாளர் திரு.சொமானி ஆகியோர் உரையாற்றினர். பின்னர் கடந்த மூன்றாண்டுகளில் BSNLன் புத்தாக்கத்திற்காகவும், ஊழியர்களின் பிரச்சனைகளின் தீர்விற்காகவும் BSNL ஊழியர் சங்கம் செய்துள்ளவற்றை நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு விரிவாக விளக்கி பேசினார்.

அதன் பின்னர் நடைபெற்ற விவாதத்தில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை உள்ள அனைத்து மாநிலங்களிலுமிருந்து வந்திருந்த தோழர்கள் விவாதத்தில் பங்கேற்றனர். நமது அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா உள்ளிட்ட மத்திய சங்க நிர்வாகிகளும் விவாதத்தில் பங்கேற்றனர். நமது தமிழகத்தின் சார்பில் தமிழ் மாநில செயலாளர் தோழர் A.பாபுராதாகிருஷ்ணன், நாகர்கோவில் மாவட்ட செயலாளர் தோழர் M.ஜார்ஜ் மற்றும் சேலம் மாவட்டஉதவிசெயலாளர்தோழர் S.ஹரிஹரன் ஆகியோர் பங்கேற்றனர். 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு, "இன்முகத்துடன் சேவை", நிலுவையில் உள்ள ஊழியர்களின் பிரச்சனைகள் ஆகியவை இந்த விவாதங்களின் முக்கிய கருவாக இருந்தது. விவாதங்களின் அடிப்படையில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1) BSNLஐபாதுகாக்க, நல்லதொரு ஊதிய மாற்றம் மற்றும் பஞ்சப்படிஇணைப்பை பெற, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை என ஐந்து கட்ட பதவி உயர்வினை பெற, ஊதிய தேக்கநிலைக்கு தீர்வுகாண, DOT மற்றும் BSNLல் நியமனம் செய்யப்பட்ட ஊழியர்களின் கோரிக்கைகளை வென்றடைய மற்றும் SC/ST ஊழியர்களின் தீர்வுகாணப்பட வேண்டிய பிரச்சனைகளுக்கு தீர்வுகாண அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சிகளும், ஒன்றுபட்ட போராட்டங்களும் தேவை. ஒற்றுமை மற்றும் போராட்டங்களின் நாயகன் BSNL ஊழியர் சங்கம் தான் என கடந்தகால அனுபவங்கள் தெளிவாக தெரிவிக்கின்றன. எனவே 10.05.2016 அன்று நடைபெற உள்ள 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலில் BSNL ஊழியர் சங்கத்திற்கு வாக்களிக்க வேண்டும் என BSNLல் உள்ள அனைத்து ஊழியர்களையும் இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

2) FORUM அறைகூவல் விட்டுள்ள "இன்முகத்துடன் சேவை" திட்டத்தை இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு முழுமனதுடன் வரவேற்கின்றது. இந்த திட்டத்தை அமுல் படுத்துவதில் தற்போது ஏற்பட்டுள்ள வேகத்தை குறைக்காமல், நூறு நாட்களும் சிறப்பாக கொண்டு செல்லவேண்டும். 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல் பிரச்சாரத்தின் காரணமாக "இன்முகத்துடன்சேவை" திட்டம் எந்தவிதத்திலும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்கின்ற எச்சரிக்கையினை இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு விடுத்துள்ளது.

3) உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்காக பணியாற்றுபவர்கள், இந்திய நாட்டை மத அடிப்படையில் பிரிப்பதற்காக முயற்சி செய்கின்றனர். IIT சென்னை, FILM AND TELEVISION INSTITUTE OF INDIA, ஹைதராபாத் மத்திய பல்கலைக்கழகம், ஜவகர்லால் நேரு

பல்கலைக்கழகம், ஜாதவ்பூர் பல்கலைக்கழகம் உள்ளிட்டவைகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இதற்கு உதாரணம். (ரோஹித்வெமுலாவின் தற்கொலை, கன்னையாகுமாரின் கைது உள்ளிட்டவை). இதுபோன்ற அரசியல் அமைப்பு சட்டம் மக்களுக்கு கொடுத்த உரிமைகளுக்கு எதிரான தாக்குதல்களை இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு கண்டிக்கின்றது. அரசியல் அமைப்பு சட்டம் மக்களுக்கு வழங்கிய உரிமைகளுக்கு எதிரான தாக்குதல்களை தொடுக்கும் அனைத்து கருத்தோட்டங்களையும் நிராகரிக்க வேண்டும் என அனைத்து BSNL ஊழியர்களையும் இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

4) 01.01.2007ல் பூஜ்யமாக இருந்த பஞ்சப்படி இன்று 112.4% ஆக உயர்ந்துள்ளது. எனவே பஞ்சப்படியை உடனடியாக ஊதியத்துடன் இணைத்திட வேண்டும் என இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு கேட்டுக் கொள்கிறது. மேலும் ஊழியர்களுக்கு 01.01.2017 முதல் நடைபெற வேண்டிய ஊதிய மாற்றத்திற்கான பேச்சு வார்த்தையினை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும் இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

5) நரேந்திரமோடி அரசாங்கம் அமுலாக்கும் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக 2016, மார்ச் 10ஆம் தேதி எதிர்ப்பு தினத்தை கடைபிடிக்க வேண்டும் என மத்திய தொழிற்சங்கங்கள் அறைகூவல் விடுத்துள்ளன. BSNLஐ புத்தாக்கம் செய்வது என்கின்ற கோரிக்கையினையும் உள்ளடக்கி இந்த எதிர்ப்பு தினத்தை சக்தியாக நடத்திட வேண்டும் என இந்த விரிவடைந்த மத்திய செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

6) வரும் இரண்டு மாதங்களில் வரவுள்ள கீழ்கண்ட தினங்களை சக்தியாககொண்டாடிட வேண்டும் என விரிவடைந்த மத்தியசெயற்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

அ) மார்ச் 8 -சர்வதேச மகளிர் தினம்

ஆ) மார்ச் 22 -BSNL ஊழியர் சங்க அமைப்பு தினம்.

இ) மார்ச் 23 -தோழர்கள் பகத்சிங், சுக்தேவ் மற்றும் ராஜ்குரு ஆகியோரின் தியாகதினம்

ஈ) ஏப்ரல் 14 - டாக்டர் அம்பேத்கரின் 125 ஆவது பிறந்த தினம்.

உ) மே 1- மேதினம்.

7) இந்த விரிவடைந்த மத்திய செயற்குழுவை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த மகாரஷ்ட்ரா மாநிலச் சங்கம் மற்றும் அஹமது நகர் தோழர்களுக்கு இந்த விரிவடைந்த மத்தியசெயற்குழு மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

எதிர்வரும் ஏழாவது சங்க அங்கீகார தேர்தலிலும் சிறப்பான வெற்றியை பெறுவோம், BSNLஐ லாபமீட்டும் நிறுவனமாக மாற்றிடுவோம், BSNL ஊழியர்களின் அனைத்து உரிமைகளையும் பெற்றிடுவோம், 01.01.2017 முதல் சிறப்பான ஊதிய உயர்வினை பெற்றிடுவோம் என்ற உறுதிப்பாட்டினை பங்கேற்றோர் மனதில் பதிய வைத்த அஹமதுநகர் விரிவடைந்த மத்திய செயற்குழு உற்சாகத்துடன் நிறைவு பெற்றது. இந்த செயற்குழு கொடுத்துள்ள வெளிச்சத்தில் வெற்றி நடைபோடுவோம். ●

தோழர் சேஷகிரிராவ் மறைவு

JETA சங்கத்தின் முன்னாள் பொதுசெயலாளர் தோழர் சேஷகிரிராவ் அவர்கள் பெங்களூருவில் 01.02.2016 அன்று மாரடைப்பால் காலமானார். தொலை தொடர்பு துறையாக இருந்த நம் நிறுவனம் கார்ப்பரேஷனாக மாற்றப்படுவதற்கு எதிரான போராட்டத்தில் அவர் உறுதியுடன் இருந்தார். தொழிலாளர்களின் நலனுக்கான பல போராட்டங்களை தலைமை தாங்கி நடத்திய நேர்மையான தலைவர் என்ற முறையில் என்றும் அவர் நம் நினைவில் இருப்பார். அவரது மறைவிற்கு நம் அஞ்சலியை செலுத்துவதுடன், அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தாருக்கும் SNEA தோழர்களுக்கும் நமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

Published by **S.CHELLAPPA** on behalf of BSNL EMPLOYEES UNION, TAMILNADU CIRCLE Published from RK Srinivas Flats, No.21, Bharathiyar 1st Street, Pazhavanthangal, Chennai-600 114. Kancheepuram District. and Printed by S.KARLMARX Printed at S.K.PRINTERS, No.18/17, EWS, NH1, Eladhariyan Street, Maraimalai Nagar, Chengalpattu Taluk, Kancheepuram Distict. Editor : **S.CHELLAPPA,** Phone : 044-2267 3931, Mobile : 94440 31715, Email : bsnleutnc@gmail.com, Website : www.bsnleutnc.com

தமிழ் மாநில செயற்குழு நிகழ்வுகள்

விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு நிகழ்வுகள்

THOLAI THODARBU THOZHAN Regd. with Registrar of Newspaper for India under No.TNTAM/2015/65855
Date of Publication : 27th February 2016

விரிவடைந்த மத்திய செயற்குழு - அஹமது நகர்